13.11.2025

O.S.No. 26/2023

DW1–திருமலைச்சாமி – த/பெ. சுப்பையா தேவர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.11.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2ம் பிரதிவாதி எனது மகன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ITI முடித்துள்ளார். வழக்கின் விவரங்கள் தெரியும். வழக்கு சொத்துக்களும், வேறுசொத்துக்களும் எனது தாத்தா நன்னித்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்காளகும். மேற்படி நன்னித்தேவருக்கு 2மகன்கள், சுப்பையாத்தேவர் மற்றும் மருதையாத்தேவர். நான் சுப்பையாத்தேவரின் மகன் என்றால் சரிதான். வாதி மருதையாத்தேவரின் மகன் என்றால் சரிதான். மருதையாத்தேவருக்கு வாதிதான் ஒரே வாரிசு, சுப்பையாத்தேவருக்கு நான் மட்டும் தான் ஒரே வாரிசு என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்துக்களையும் வேறு சொத்துக்களையும் சுப்பையாத்தேவரும், மருதையாத்தேவரும் வாய்மொழியாக அனுபவம் செய்துவந்தனர் என்றால் சரிதான். தபசில்சொத்துக்களும், வேறு சொத்துக்களுக்கும் பட்டாவை தவிர வேறு எந்த மூலஆவணமும் கிடையாது என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்து ஆதியில் பட்டா எண்.517 வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பட்டா தான் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவினை மாற்றி பட்டா எண்.985 என்று வட்டாட்சியர் 2002ம் ஆண்டு ஒரு உத்தரவு பிறப்பித்தார்

என்றால் சரிதான். அந்த ஆவணம்தான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். 2002 லிருந்து வழக்கு சொத்து வாதியின் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். 2002 லிருந்து நான் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை, எனக்கு 2017 ம் ஆண்டுதான் தெரியவந்தது. அப்போதே நான் முயற்சி எடுக்கவில்லை என்றால் காரணம் என் பிள்ளைகளின் படிப்புக்காகவும், சில பிரச்சனைகள் இருந்ததால் அதனை முடித்துவிட்டு முயற்சி எடுத்தேன்.நான் வட்டாட்சியரிடம் இது தொடர்பாக மனு எதுவும் கொடுக்கவில்லை, வாதியிடம் சொன்னேன். நான் 2002 ம் ஆண்டு பட்டா உத்தரவை வாதியிடம் ஆட்சேபனை செய்தேன். 2002 க்கு பின்பு வழக்கு சொத்துக்கு தீர்வை செலுத்தினேனா என்றால் செலுத்தவில்லை.

4. வா.சா.ஆ.4 ஆவணம் எனது மகனுக்கு நான் எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் ஏற்படுத்தும்போது பட்டா எப்போது மாற்றப்பட்டது என தெரிந்தபின்பு தாசில்தாரின் ஒப்புதலுடன்தான் வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்தினேன். வா.சா.ஆ.4 ஆவணம் ஏற்படுத்தும்போதே வாதியின் பெயரில் பட்டா உள்ளது எனக்கு தெரியும். எனக்கு 1 மகன், 1 மகள் உண்டு. எனக்கு அதிகமான சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். பிற சொத்துக்களுக்கெல்லாம் பட்டா எனது பெயரில் இருந்தது, இந்த சொத்துக்கு எனது பெயரில் பட்டா இல்லை என்பதால் ஏற்படுத்தினேன். ஒரு ஆவணத்தை உற்பத்தி செய்யும் நோக்கோடு எழுதினேன் என்றால் சரிதான்.

5. எனது ஊரில் அருணாசலதேவர் மகன் ராமசாமியை தெரியும் என்றால் சரிதான். அவர் எனது உறவினர். அவருக்கு வழக்கு சொத்துக்கு

அருகில் 300 அடி துாரத்தில் வேறு சொத்து உள்ளது என்றால் சரிதான். அவர்தான் வாதி தரப்பில் 2 வது சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு 24.09.2025 ம் ஆண்டு பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் வாங்கும்போது வழக்குவிவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன பயிர் என்று குறிப்பிடவில்லை, எந்த தேதியில் கிராம நிர்வாகஅலுவலர் ஆய்வு செய்தார் என்றவிவரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் உண்மையற்ற ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் உண்மைதன்மையை அறியவேண்டும் என்றால் கிராமநிர்வாக அலுவலரை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். இந்த ஆவணத்தை மோசடியாக உற்பத்திசெய்தேன் என்றால் சரியல்ல.

7. நான் எனது மகன் பெயரில் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில்தான் பி.வா.சா.ஆ.5 எழுதப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல, எனது அனுபவத்தில்தான் இருந்து வருகிறது. வாதியின் சொத்தை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்றநோக்கோடுதான் வா.சா.ஆ.4 ஆவணத்தை உற்பத்திசெய்தேன் என்றால் சரியல்ல. வாதிகேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.